தென்னகம்

ஆசிரியர் : K.A. மதியழகன்

மலர் - 1 | 20 - 11 - 59 வெள்ளி | இதழ் - 44

உணவு ஊர்வலம்!

K.A. மதியழகன்

ரொட்டிக் கடைகளின் முன், வரிசைவரிசையாக பட்டினிப்பட்டாளம் மணிக் கணக்கிலே நிற்கின்றனர், பசிநிறைந்த தாய்மார்கள் பச்சிளங் குழந்தைகளை இடுப்பிலேந்தி நெடுநேரம் நிற்கின்றனர். பல குழந்தைகள் பட்டினியால் கோரமாக மடிந்து விழுகின்றன. தாய்மார்கள்கோவெனக் கதறுகின்றனர்.

வர்செயில்ஸில் இருக்கும் மன்னன் கருணைமூர்த்தியாம், கனிவுள்ளம் படைத்தவனும். அவன் பாரீஸ்வந்தால்உணவு கிடைக்கும்.

அப்பாவித் தாய்மார்களே! மன்னனும் மன்னன். நம்மை சுட்டுத் தள்ளுவதற்கு அந்நிய பட்டாளத்திற்கு விருந்து கேளிக்கை[illegible] நடத்திக் கொண்டு[illegible]. அலங்காரவல்லி – ஆஸ்திரிய தேச இளவரசி – ஆணவக்காரி பிரஞ்சு நாட்டு பட்டமகிஷி மேரி அண்டாய்னெட், போர் வீரர்களுக்கு மது வழங்கிக் கொண்டிருக்கிறாள் விருந்து மண்டபத்தில். இங்கே வேந்தன் வந்தால் வேதனை தீரும் என்று புலம்பிக்கொண்டிருக்கிறீர்கள், புத்தியில்லாதவர்கள் என்றனர் விபரம் புரிந்தோர்.

பட்டினியால் பதைத்த பதினாறு வயது பாவை ஒருத்தி முரசு ஒன்றை ஏந்தினாள் “தாய்க்குலமே! ஏழை எளியவரே! இல்லாதவரே! பட்டினியால் பரிதவிக்கும்உடன்பிறப்புகளே! பாட்டிகளே! குழந்தைகளே எல்லோரும் வாருங்கள் எத்தனை நாட்கள் மரணம் உங்களை விட்டுவைக்கப்போகிறது. வில்லி ஒட்டல் மைதானத்தில் கூடுங்கள் என்றுமுரசறைந்தாள்.”

ஒலி கேட்டு ஓடி வந்தது தாய்க் கூட்டம். பஞ்சடைந்த கண்கள், ஒட்டிய வயிறு, பசியின் ரேகைகள் பட்ட முகம். இப்படிப்பட்டகூட்டம்வெள்ளமெனப் பெருகியது.

மெயிலார்ட் எனும் பெயராளன். அந்த ஆவேசக் கூட்டத்திற்கு தலைவனானான்.

“எப்படிப் பெறுவது என்று கேட்கிறீர்களா? வர்செயில்சுக்கு கிளம்புவோம். அந்த ரொட்டிக்கிடங்குக்காரன் லூயியை இங்கே கையோடு கொண்டுவருவோம். அதுதான் ஒரே வழி” என்று கர்ஜித்தான்.

தாய்க்குலம் புறப்பட்டது. பெண்டிர் படையின் முன்வெடிகுண்டு என்னாவது? கூர் நிறைந்த ஈட்டி, அவ்வளவு சுலபமாக பாய்ந்துவிட முடியுமா?

மன்னனுக்கு பட்டினிப் பட்டாளத்தைப்பற்றி என்ன கவலை? வழக்கமான வேட்டையிலே ஈடுபட்டிருந்தான்.

அலங்காரவல்லி அண்டாய்னெட்டுக்கு அரண்மனையில் தனிமை வெரிச் சென்றிருந்தது. அழகிய மலர்ச்சோலையில் வண்ணதடாகத் தருகே அமர்ந்து சீன நாட்டு பொன்னிற மீன்களுக்கு ஆகாரம் போட்டுக் கொண்டிருந்தாள்.

சேதி கேட்டதும் ரொட்டியில்லா விட்டால், இங்கேன் வருகிறார்கள் என்றாள் உல்லாச உய்யான வனத்தில் உலவிய சீமாட்டி.

“மஹாராணி பட்டினிப் பட்டாளமொன்று ஊர்வலமாய் நமது மாளிகையை நோக்கி வருகிறது” என்றான் ஓடி வந்தவன். தலை தெறிக்க அரண்மனையை நோக்கி ஓடினாள் அண்டாய்னெட் பொன்னிற மீன்களை திரும்பிப்பார்க்கவில்லை. ஏன் அந்த காமவேள் நடனசாலையை – மரகத பட்டாடை போன்ற பசும்புற்றரைகளை, மலர் குலுங்கும் வனத்தை அழகிய மணிக்குன்றுகளை திரும்பவும் அவள் பார்க்கப்போவதே கிடையாது என்பது அப்போது அவளுக்குத் தெரியாது. கேள்விப்பட்ட மன்னர் பிரானோ “பாவம்! விஷயம் புரியாத மக்கள் என்னிடம் ரொட்டி கேட்க வருகிறார்கள். என்னிடமிருந்தால்

(8-ம் பக்கம் பார்க்க)



1863-ம் ஆண்டு நவம்பர் 19-ம் நாள் அடிமை விலங்கொழித்த வீரர் ஆபிரஹாம் லிங்கன், அமெரிக்காவில் ஜெட்டிஸ் பர்க் நகரத்தில் இருக்கும் கல்லறை மைதானத்தில், ‘இன்று பேசுவதை நாளை மக்கள் மறப்பர்‘ என்றுதன்னடக்கத்தோடு: சில பொன்மொழிகள் கூறினார். ஆனால் அதற்கு நேர் மாறாக லிங்கனின் ஜெட்டிஸ் பர்க் கல்லறை மைதானச் சொற்பொழிவை மக்கள் என்றுமே மறப்பதில்லை!

சின்ன நாடாயிற்றே, வாழுமா?

இவர்கள் விடுதலை பெற்றால் அதிகாரத்தை நடத்துபவர்கள் யாருமின்றி தொல்லைப் படுவார்களே? என்று சிலர் பேசினர்கள்.

நாகரீகம் நல்ல முறையில் பரவாத இந்த நாடு உலக அரங்கில் தனித்து நிற்குமா? என்று அரசியல் அறிந்தவர்கள் கணிக்கத் தொடங்கினர்.

பொருளாதாரத் துறையில், பெரிய வசதிகளில்லாமல் இருக்கும்போதே இவர்கள் விடுதலையை விரும்புகின்றார்களே? இது இவர்கட்கே கெடுதல் அல்லவா" என்று சில பொருளாதார நிபுணர்கள் பேசினர்.

இப்படிப்பட்ட எல்லா யோசனைகட்கும் மேலாக, பிரெஞ்சு நாட்டுச் சர்வாதிகாரி டிகால், அந்த நாட்டுமக்கள் விடுதலையை வற்புறுத்தினால், தான் தனது நாட்டு பெரியஅதிகாரிகள் அனைவரையும், அந்த நாடடிலிருந்து கூட்டிச் சென்று விடுவேன் என்று மிரட்டினான்.

இப்படிப் பட்ட எந்த வாசகங்கட்கும், ஆலோசனைக்கும் அந்த நாட்டுத் தலைவன் கட்டுப்படவில்லை. விடுதலை பெற எந்த அல்லல் வரினும் ஏற்போம், என்று அயராது பணி புரிந்தான்.

இவனது பிடிவாதத்தைக் கண்ட டிகால், இவனை நேரில் அழைத்து தனது நாட்டு ஆதிபத்தியத்தில் டொமினியன் அந்தஸ்து பெற்று, பொருளாதாரத் துறையில் முன்னேற்றத்துடன் வாழும்படிக் கூறினான்.

"பணக்காரனாக இருந்து அடிமையாக வாழ்வதைக் காட்டிலும், விடுதலைப்பெற்ற ஏழையாக வாழ்வதே மேல் என்ற மறுமொழியைப் பதிலாகத் தந்தான் டிகாலுவுக்கு.

முப்பத்தைந்து வயது நிரம்பிய இளைஞன், அரசியலின் தன்மையை சரிவரப்புரிந்து கொள்ளாமல் தான் இப்படிப் பேசுகின்றான் என்று உலகம் நம்பிற்று. விடுதலை பெற்றால் எப்படி இவன் வாழ்ந்து விடுவான் பார்க்கலாம் என்று தான், பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் கருதிற்று, விடுதலையை அளிக்கும்போதே, தன்னுடைய அதிகாரிகள் அத்தனைப்பேரையும் தனது நாட்டுக்கு அழைத்துக் கொண்டது.

சென்ற ஆண்டு இத்தனை இடைஞ்சல்களையும் தாண்டி, சுகோ டொர்ரு என்ற அந்த இளைஞன் தனது நாடான கினியாவைத் தலைமையேற்று ஆளத் தொடங்கினான்.

உலகம் அவன் ஆட்சியை, எப்படி நடத்தப்போகின்றான் என்று வேடிக்கை பார்த்தது. உடனடியாக சரியான அதிகாரிகள் இன்றி இவன் எவ்வளவு நாள் வாழமுடியும் என்று பிரஞ்சு நாட்டவர் எண்ணினர்.

சுகோ டொர்ரு, இளைஞனாலும், அரசியலை நன்கு கற்றுணர்ந்தவன். தனது இளம் வயதில், மார்க்ஸின் தத்துவங்களை வார்சாவிலும், பிரேக் நகரிலும் பயின்றவன். பெற்ற விடுதலையை எப்படிப் பேணிக்காப்பது என்பதிலே சரியான பாதையைவகுத்தான். அண்டை நாடான கனாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு பல நீக்ரோ அதிகாரிகளைப் பெற்று ஆட்சியை ஒழுங்காக நடத்த ஆரம்பித்தான், தனக்கு ஏற்கனவே பழக்கமான கம்யூனிஸ்ட் நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்களை உருவாக்கித் தன் நாட்டின் வியாபாரத்தை விருத்தி செய்ய ஏற்பாடு செய்தான்.

உலகம் அவனை ஒரு கம்யூனிஸ்ட் என்று நம்பிற்று. இன்று

க. இராசாராம் பி.ஏ.

அவன் தனது போக்கில் ஒரு புது மாறுதலை உண்டாக்கிக் காட்டியுள்ளான். தான் தனது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவனே யன்றி, தான் ஒரு சிலருக்கு கட்டுப்பட்டவன் அல்ல என்பதைக் காட்டிக் கொள்ளும் தன்மையில், சென்ற வாரம் அமெரிக்காவிற்குத்தனது துணைவியுடன் சென்றிருக்கின்றான்.

நீக்ரோக்கள், நிரம்பிய சிறிய நாட்டின் தலைவனை உலகம் மதிக்குமா? என்ற காலம் மாறி சென்ற ஆண்டு விடுதலைபெற்ற கினியா நாட்டுப் பிரதமரையும், அவர் துணைவியையும், அமெரிக்க நாடடுத் துணைத்தலைவர், நிக்சனும், அவரது மனைவியும், பிளாரிடா நகருக்கு ஓய்வாக இருக்கச் சென்றவர்கள் அதை நீக்கிவிட்டு, ஓடோடி வந்து விமான நிலையத்தில் வரவேற்றுள்ளனர். ராணுவ அணிவகுப்பும், இருபத்தியொரு குண்டு மரியாதையும் நடைபெற்றிருக்கின்றது.

வெள்ளை மாளிகையில், அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவருடன் சுமார் ஒருமணி நேரம் ஆப்ரிக்க நாடுகளின் நிலைமை குறித்துப் பேசியுள்ளனர். இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக ஆப்ரிக்க நாடுகளின் எழுச்சிக்குத் திட்டம் தீட்டப்பட்டாய்விட்டது, என்று சுகோ தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

வாஷிங்டன் நகரில் உள்ள தேசியக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விருந்தில் கலந்து கொண்ட சுகோ டொர்ரு, பேசுகையில் "உங்களிடம் இருந்து நாங்கள் உதவியை எதிர்பார்ப்பதைவிட, சமத்துவத்தையே அதிகமாக எதிர்பார்க்கிறோம்" என்றுகுறிப்பிட்டுள்ளார்.

காட்சியைக் காண்மின் !

வாஷிங்டனிலிருந்து, வட கரோலினாவுக்குச் சென்று அங்குள்ள நீக்ரோக்களது இன்சூரன்ஸ் நிறுவனத்தைப் பார்வையிட்டார். வட கரோலினாவின் கவர்னர், லூதர் ஹாட்ஜஸும், டர்ஹாம் நகரத்து மேயரும் மற்றும்பல அமெரிக்கர்களும் நிற வேற்றுமை எதுவும் பாராட்டாது அவ[illegible]வரவேற்றுள்ளனர். இந்த [illegible]வேற்பு தான் எதிர்பார்த்ததை[illegible]விட பல மடங்கு மேலானதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அன்று அது வரை எந்த நீக்ரோவும் தங்காத இடமான (சாப்பில்ஹில்) என்னுமிடத்தில் இவரை அமெரிக்கர்கள் தங்கவைத்து தங்களது வரவேற்பைத் தெரிவித்துள்ளனர். அந்த நகரத்துக் கல்லூரி அவருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துள்ளது.

அந்த நகரத்தில் உள்ள பெரிய இன்சூரன்ஸ் நிறுவனத்தில் பேசுகையில், "தொழிற்துறையில் வெற்றிகரமாக முன்னேறுவதற்காக நாங்கள் ஆப்பிரிக்க நாட்டைவிட்டு வெகு தூரத்து நாடுகளுக்கு செல்ல வேண்டியிருப்பதை உணருகின்றோம். ஆனால், நாங்கள் ஆப்பிரிக்காவை விட்டு எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எந்த நாளும் வெளியேற வேண்டியதில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது சுற்றுப்பயணம் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அமெரிக்க நகரங்களான லாஸ்ஏஞ் செல்லும், சிக்காகோவும் அவரை வரவேற்கக் காத்துக் கொண்டிக்கின்றது.

அந்த நாட்டின் தொழில் வளத்தையும். அந்தநாட்டுத் தலைவர்கள் பலரையும் சுகோ தனது சுற்றுப் பயணத்தில் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார். அத்துடன் தனது இனமக்களின் நிலைமையையும் நேரில் கண்டறிந்து வர இருக்கின்றார்.

சின்னநாடாயிற்றே, வாழுமா? என்று கேட்டவர்கள் இன்று அந்தக் காட்சியைக் கண்டு கொண்டு இருக்கின்றார்கள்.

உலகத்தில் இவர்களுக்குதக்க மதிப்பு இருக்குமா! என்று கேட்டவர்கள். இன்று அந்த நாட்டின் முப்பத்தேழு வயது நிரம்பிய சுகோடொர்ருவை வரவேற்பதைக் காண்கின்றார்கள்.

நிறவேற்றுமை பாராட்டும் நாடாகக் கருதப்படும் அமெரிகா தனது அன்பை ஆப்பிரிக்கக் கண்டத்து, சிறிய நாட்டுத் தலைவன் சுகோடொர்குவுக்கு வெளிப்படுத்திக்காட்டியுள்ளது.

அந்த நாட்டுப் பத்திரிகைகள், அந்த நீக்ரோத் தலைவனை வரவேற்று எழுதியுள்ளன. அரசியலில் சம்பிரதாய மரியாதைகள் அனைத்தும் முறை பிசகாமல் நடைபெற்றுள்ளது. இது அத்தனையும், சின்னஞ்சிறிய நாட்டுத் தலைவனுக்கு நடை பெற்றுள்ளது.

நீக்ரோக்கள், ஒரு காலத்தில் காட்டுமிராண்டிகள். அவர்கள் இன்றுநாடாள்கிறார்கள். ஆனால் நமது நாட்டவர்களில் சிலர் இன்னமும் நாம் பிரிந்தால் வாழ்வோமா? என்று கேட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள். அவர்கள் இன்று உலகஅரங்கில் நடைபெறுவதைக் காண்பார்களேயானால், நமது பாதை சரியானது என்பதை உண[illegible]வார்கள்.

அப்படி அனைவரும் உண[illegible] நாள், விரைவில் வர ஆவ[illegible] செய்வோம்.

இசைப்பாடல்

எழுது, நீ எழுது !

"அயிந்தன்"

எழுது! எழுது! எழுது!
அன்று எழுதியவன் அழித்தெழுதான் என்ற
அறிவுக்குப் பொருந்தாக் கருத்தினைத் திருத்தி
(எழுது)

உழுது பயிரிட்டு விளைத்தவன் அழுதிட
உண்டு கொழுத்திடும் உலுத்தரின் கொடுமையும்
தொழுவினில் மாடென வாழ்ந்திடும் ஏழைத்
தொழிலாளர் படும் தொல்லை யனைத்தையும்
(எழுது)

புழுதியி லேபலர் வீழ்ந்து கிடந்திட
பொய்யர்கள் உயரிய மாடியில் வாழ்ந்திட
விழிநீர் பெருகிடத் தெருவினில் அலைந்திடும்
இழிநிலை கொண்ட ஏழையர் துயரை (எழுது)

கணவனை யிழந்து வாடிடும் கைம்பெண்
காசுக்கு உடலை விற்றிடும் மகளிர்
மணம்பெற வாழ்வினில் மாசினைத் துடைத்திட
மானங் காத்திட வழிவகை யெல்லாம் (எழுது)

வட்டி வட்டியென ஏழையை வாட்டி
துட்டினை யிருப்புப் பெட்டியில் கொட்டி
பெட்டிப் பாம்பென ஏழையை யாக்கும்
பெரும்பண முதலைகள் குறும்பினை ஒழித்திட
(எழுது)

மலர் 1] [இதழ் 44

திரு. சந்தானத்தின் — — மேதாவிலாசம்!

"இந்திய அரசியல் சட்டமும் அதன் விமர்சகர்களும்" என்ற தலைப்பில் திரு. கே. சந்தானம் அவர்கள் 'இந்து' பத்திரிகையில் ஓர் சிறப்புக் கட்டுரை தீட்டியுள்ளார். திரு. சந்தானம் அவர்கள் கட்டுரைகள் தீட்டுவதில் புதுமை எதுவும் இல்லை, இன்றையதினம் அவரது சாதாரணஅலுவலே அது தான் என்பது நமக்குத் தெரிந்தாலும் வேண்டுமென்றே சில புதிய வியாக்யானங்களில் ஈடுபட்டுள்ளார்.

ஒவ்வொரு நாட்டுக்கும் அரசியல் சட்டம் இன்றியமையாதது. நல்ல அரசியல் சட்டம் உள்ள நாடுகள்தான் வளமும் வாழ்வும் பெறமுடியும். இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளின் பெருவாழ்வுக்கு அந்தந்த நாடுகளின் அரசியல் சட்டமும் காரணம் என்று தொடங்கும் அரசியல் வகுப்புடன் முடித்திருந்தால், அவரது மேதா விலாசத்தை ரசிப்பவர், ரசித்துக் கொண்டிருக்கட்டும் என்று விட்டு விட்டு நமது வேலையைத் தொடரலாம்.

இந்திய அரசியல் சட்டத்தின் அருமை பெருமைகளையும், மூன்றுண்டுகளில் ஒருபெரும் அரசியல் சட்டத்தை உருவாக்கிய பேராற்றலையும் புகழ்ந்துள்ளார். அவர் நிலைக்கு அது தேவைப் படலாம். அதனையே தொடர்ந்[illegible]காரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வன[illegible]ாய் கண்டித்துள்ளார்.

நீதிபதி மகஜன், சின்னுட்களுக்கு முன்பு தீட்டியிருந்த கட்டுரையை துணைக்கழைத் துள்ளார். இப்போதுள்ள அரசியல் அமைப்பின்படி பல்வேறு மாநிலங்களிலும் பிரிவினை மனப்பான்மை துளிர்க்கும், காங்கிரசுக்கு பல்வேறு மாநிலங்களிலும் ஆதிக்கம் உள்ளவரையில் கூட்டு சர்க்காரின் தீமைகள் வெளிவராது. பிறகு நிலைமை என்ன ஆகும், பல்வேறு மாநில சர்க்கார்களை வெவ்வேறு அரசியல் கட்சிகள் பிடித்துக் கொண்டால் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊனம் ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

திரு. சந்தானம் இதனையே தொடர்ந்து, மகஜன்பெரும் உண்மையைக்கண்டு சொல்லியிருக்கிறுர் என்று கருதிக் கொள்ளாதீர்கள், அவருக்கு முன்பே காலஞ்சென்ற சேலம் விஜயராகவாச்சாரியார் இதைவிட தெளிவாகக் கூறியுள்ளார் என்று விஜயராகவாச்சாரியாருக்குசேரவேண்டிய பெருமையை குறித்துள்ளார். நமக்கு ஒன்றும் பங்காளிச் சண்டையில்லை, ஆனுல் அதிகாரங்களை பரவலாக்கக்கூடாது, ஒரே மத்திய சர்க்காரின் கீழ் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தும் கட்டுரையில் ஏதோ மனமுவந்து, மண்ரோடுகள் போடுதல் சிறிய நீர்ப்பாசனத்திட்டம், ஆரம்பப் பள்ளிக்கூடம் போன்றவைகளின் அதிகாரங்களை அளிக்கலாம் என்று கூறியுள்ளார். அந்த அளவிற்கு அவரின் பெரிய மனதுக்கு மாநில சர்க்கார்கள் நன்றி செலுத்த வேண்டும்! ஆனுல் அந்த அதிகாரங்களைக்கூட சரியாக பயன்படுத்தப் படுகிறதா என்பதை கவனித்து உடன் கண்காணிக்க வேண்டுமாம். இவ்வளவு தாராள மனதுடையவர் கட்டுரையின் பிற்பகுதியை தனிநாடு கோரிக்கையைக் கண்டிக்க பயன்படுத்தியுள்ளார்.

வழக்கமாக நாம் கேள்விப்படும் காரணங்களைத்தான் அடுக்கியுள்ளார். ஆனுலும் நமது கோரிக்கையை தங்கள் வாயால் பேசுவதே தங்கள் "மேதா விலாசத்திற்கு" இழுக்கு என்று கருதிக்கொண்டிருக்கும் இந்த ஞாஞசிரியர்கள் நமது கோரிக்கையை அலசி ஆராய முற்பட்டிருப்பதே ஓர் புதிய கட்டம் என்று சொல்லுவோம். அதற்காக ஒரு வகையில் மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழகத்தில் தற்கொலைக் கொப்பான பிரச்சாரம் நடைபெறுகிறதாம்! தனிநாடு வேண்டுமென்பவர்களுக்கு சரித்திரமும், பொருளாதாரமும், விஞ்ஞான முன்னேற்றமும் தெரியாததாம். தென்அமெரிக்க நாடுகளும், மத்திய ஆசிய நாடுகளும் பிற்போக்காக இருப்பதற்கு வலிமை பொருந்திய ஓர் பேரரசில் இல்லாததுதான் காரணமாம்! நமது நதிகளின் மூலம் தமிழ் நாட்டிற்கு வெளியே உள்ளதாம். நமக்கு வேண்டிய ராணுவத்தை, ரயில்வே போக்குவரத்தை, பாங்கிகளை நாமே திறம்பட நடத்த முடியாதாம். நாம்தான் மற்றவர்களிடம் நிறைய பெற்றுள்ளோமாம், நம்மை மற்றவர்கள் சுரண்டுகிறுர்கள் என்பது தவரும்! எனவே அதிகாரத்திலுள்ளவர்கள் தக்க சமயத்தில் இந்த பொய்ப் பிரச்சாரத்திற்கு பதிலிறுக்க வேண்டுமாம். சட்டத்தை குறைசொல்லாதீர்! சர்க்கார் நடத்தும் கட்சித் தலைமையை வேண்டுமானுல் கண்டித்துத் திருத்த வேண்டுமாம்! இந்த வகையில் திரு சந்தானம் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

நாம் அடிக்கடி கேட்டு பழக்கப்பட்ட சப்பில்லாக் கேள்விகளைத்தான் கேட்டுள்ளார். நூறுமுறை இவைகளுக்கு பதில் சொல்லப்பட்டுள்ளது, ஆனுல் இப்படிப்பட்ட வாதங்களை தனது பத்திரிகையின் எந்த மூலையிலும் இடம்பெறக் கூடாது என்று கருதியிருந்த 'இந்து' பத்திரிகை கீழேஇறங்கி வந்துள்ளது நல்ல அறிகுறியாகும், அலட்சியத்தினுலேயே ஒன்றை அழுத்திவிடலாம் என்று கருதிக்கொண்டிருந்த மமதை மனோபாவம் இதனுல் சுக்கு நூருகிறது என்பதில் நமக்கு உண்மையில் இதுஒரு வெற்றியே யாகும்.

திரு சந்தானம் அவர்கள் நமக்கு சரித்திரம், பொருளாதாரம் ஆகியவைகளில் போதிய அறிவு இல்லை என்கிறுர், நாட்டின் விடுதலைப்போர், சரித்திர பொருளாதார பேராசிரியர்களால் மட்டும் நடத்தப்படும் சம்பவமல்ல. சுதந்திர உணர்வு துடிக்கும் பலகோடியினரின் இதயத்தில், தன்னுடு, தனியரசு என்ற பெருந்தீ கொழுந்துவிட்டெரியத் துவங்கும் போது வாதப்பிரதிவாதங்கள் தவிடுபொடியாகின்றன. பொருளாதார நிறைவுடையதுதானு, பழம் வரலாறு உண்டா, எந்த இடத்தில் எல்லைக்கல்லை நடுவது என்பனபோன்ற விளக்கவுரை, தெளிவுரைகளை கேட்டுக்கொண்டிருப்பதற்கு நேரமும் நினைப்பும் இடம் கொடுப்பதில்லை. அந்நியனின் காலடியில் நாடு சிக்கி அவதியுறுகிறது. அந்த நிலைமாற வேண்டும். கொஞ்சு மொழிக்கோதை உணவூட்டினும் கூண்டு வாழ்க்கை தேவையில்லை எனக்கூறும் பஞ்சவர்ணக் கிளிகளாகின்றனர் விடுதலை விரும்பிகள்.

இந்திய ஜனுதிபதியாக இருக்கும் பாபு ராஜேந்திரபிரசாத் அவர்கள் பாகிஸ்தான் பிரியக்கூடாது. பிரிந்தால் ஏற்படும் பொருளாதாரக் கேடுகளைவிளக்கி 'பாகிஸ்தான்' என்ற பெரு நூலே எழுதினுர். அந்த ஏடு, புழுதி படிந்து புத்தகக் கடைகளிலே உறங்குகின்றது. ஆனுல் சுதந்திர பாகிஸ்தானின் பிரதிநிதிகளை டில்லி ஆகாயவிமான நிலையத்தில் ராஜேந்திரபிரசாத் வரவேற்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பாகிஸ்தானில் நமது தூதுவராலயமும், இங்கே அவர்கள் தூதுவராலயமும் பணியாற்றுகின்றன. விடுதலை உணர்வு கொண்ட மக்களின் எழுச்சி விவாத மண்டபங்களில் அடங்கி, ஒடுங்கி விடுவதில்லை. முடியுமா, முடியாதா என்று கேள்விகளை விட தேவையா, தேவையில்லையா என்ற கேள்விகளே முன்னின்றிருக்கின்றன.

"இந்தியாவின் தீர்ப்பு" என்ற நூலை எழுதியதன் மூலம் பாரத புத்திரர்களின கோபக்கனலுக்கு ஆளாகிவிட்ட நிக்கலஸ் என்பவர், பாகிஸ்தானின்சிற்பி ஜின்னுவை சந்தித்தபோது, ஒரு கேள்வி கேட்டார். அந்த கேள்வியில் சந்தானம் அவர்களின் பாணி இருந்தது. 'தாங்கள்கூறும் பாகிஸ்தான் பொருளாதார நிறைவுடையதுதானு? தனது நிலையை சமாளித்துக்கொள்ளுமா' என்று கேட்டார். அதற்கு ஜின்னு அவர்கள் "இப்போதிருக்கும் இங்கிலாந்தைக் காட்டிலும் ஐஸ்வரிய இங்கிலாந்து இருக்கும். ஆனுல் அதில் நீங்கள் அரசியல் அடிமைகள். அதுவேண்டுமா? அல்லதுசுதந்திரமான வறுமையானநாடே பரவாயில்லையா என்று உங்களைக் கேட்டால் எதை விரும்புவீர்" என்ருர். வந்தவர் "வறுமை தவழ்ந்தாலும் பரவாயில்லைசுதந்திரமுள்ளநாடுதான் தேவை" என்ருர். இதே பதிலை பாகிஸ்தான்விஷயத்திலும் பொருத்திக் கொள்ளுங்கள் என்ருர் ஜின்னு.

இவைகளை நாம் கவனப்படுத்துவதற்குக் காரணம், திரு. சந்தானம் அவர்கள், இவற்றை அறியமாட்டார் என்றதால் அல்ல. நம்மை விட இன்னும் தெளிவாக தெரிந்திருக்கக் கூடும், ஆனுல் தாம் எடுத்த வழக்கிற்கு சாதகமான விபரங்களை சேகரிப்பதிலும், அவைகளை முன்னிலைப் படுத்துவதிலும், தங்கள் திறமையை, மேதா விலாசத்தை பயன்படுத்துகிருர்களே தவிர, நியாயம், நீதி என்பவைகளுக்கான உரிய மதிப்பைக் கொடுக்க முன் வருவதாயில்லை.

உரிமைப் போராட்டங்களின் தன்மையை பாண்டித்யம் என்றும் அடிமை கொண்டதில்லை. அங்கு வெற்றுரைக்கு அவகாசமே யிருப்பதில்லை. இன்று உலகில் நாள் தோறும் மலர்ந்து வரும் சின்னஞ் சிறு நாடுகளின் தனியாட்சி இத்த பேருண்மையைத்தான் பறை சாற்றுகிறது. நமது தாயக விடுதலையை தாமதப்படுத்தலாமே தவிர தடுக்க தரணியில் எந்த சக்திக்கும் ஆற்றல் இல்லை.

கொங்குநாட்டு தீரன் சின்னமலை

K.A.மதியழகன்

கோபக்கார அண்ணி!

6

சின்னமலை ஓலையைப் படித்து முடித்தான். மீண்டும் ஒருமுறை படித்தான். கடைசியாக சில சில வரிகளைப் படித்தான். விடியற் காலை ஆகிவிட்டது. அவனது நெஞ்சில் இருந்தபாரம் ஏதோ குறைக்கப்பட்டதுபோல் ஓர் உணர்ச்சி தென்பட்டது. காலில் முள் குத்தியிருந்தால், அதை களைந்துவிட்டால் ஏற்படும் சுகத்தை அவன்பெற்றிருந்தான். பெரிய தம்பியின்மேல் இருந்த கோபம் எங்கேயோ பறந்து விட்டது.

தம்பியின் மனதில் இவ்வளவு இரகசியங்களை மறைத்து வைத்துக்கொண்டிருந்தான் என்பதே புரியாமல் போய்விட்டது. இளைஞன்! ஆசை தளும்பும் பருவம் தானே! மனதிற்கிசைந்தமங்கை நல்லாள் கிடைக்க வேண்டும். மா, பலா, கமுகு ஆகிய கனிகளால் முடைந்தமணப் பந்தலின் கீழ், தோரண வரிசைகளைகிழித்துக்கொண்டு வந்து அமரும் புதுப் பெண்ணிற்கு மணமாலை சூட்ட வேண்டும், மத்தளங்கள் முழங்கவேண்டும், சங்குகள் ஒலிக்க வேண்டும், சதிரிளம்மங்கையர் ஆடவேண்டும். கோடியுடுத்த வேண்டும், அன்னைமார் வாழ்த்துக் கூறவேண்டும், மணமகளோடு வீதிவலம் வரவேண்டும், இருமருங்கும் சூழ்ந்து நிற்கும் மகளிர் விழியால் பல்லாண்டுகூற வேண்டும் என்று தன் எல்லா வாலிபனும் வனிதையும் கருதுவார்கள். பெரிய தம்பி மட்டும் விதிவிலக்கா என்ன என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

"அண்ணன் சம்மதித்தால் அவருக்கும் உங்கள் மகளுக்கும் திருமணம்" இந்த வாசகங்களை அவன் உதடுகள் திருப்பித் திருப்பி முணு முணுத்தன. அவனையும் அறியாமல் சிரித்துக் கொண்டான்.

"அண்ணனுக்கு தம்பியே பெண் பேசும் நிலை! பெரிய தம்பி மீதும் தவறில்லை. என் மனத் திரையிலே ஓடும் எண்ணங்களை அவன் தெரிந்திருக்க நியாயம் இல்லை பெரிய தம்பி இரவு, பகல் என்னுடனே தான் இருக்கிறான். நான் இடும் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கே அவனுக்கு நேரமிருப்பதில்லை. இருந்தாலும் பழனிப் பாவை தம்பியின் இதயத்திலே செய்யும் நர்த்தனத்தை என்னால் தெரிந்துகொள்ளவா முடிந்தது? பரவாயில்லை. பெரியதம்பி முத்துவேலப்பரைச் சந்திக்கக் கிளம்புமுன் அவனை கண்டு தடுக்க வேண்டும். ஒரு தவறுடன் இன்னொன்றும் சேர்ந்து விடக் கூடாது. எப்படியும் பெரியதம்பி எழுந்து சென்னிமலை கிளம்புவதற்கு நாலு நாழிகை ஆகும்! இருந்தாலும் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது அவன் கண்விழித்ததும் அவனைக்கண்டு நிலைமையை விளக்கவேண்டும். பெரியதம்பி! உன் மீது எனக்கு துளியும் கோபமில்லையடா, காதலின் தூய்மையை உணர முடியாத கயவனல்லடா உன் அண்ணன்! உன் விருப்பபபடி திருமணம் நடைபெறும். உன் கருத்தைக் கவர்ந்த அந்த காரிகை எந்த மூலையில்தான் இருக்கட்டுமே! கண்டுபிடிப்பது என் வேலை. அதுபற்றி கவலை வேண்டாம். ஆனால் ஒரு வேண்டுகோள். நீ முத்துவேலப்பரை சந்திக்க வேண்டியதில்லை. ஏனென்றால் எனக்கு ஏற்பட்ட சிக்கலே உனக்கும்ஏற்பட்டுவிடும். 'தம்பியைக் கலந்துகொண்டு' என்று வாக்களித்ததுபோல் அண்ணனைக் கலந்துக் கொண்டு' என்று வாக்களித்து[illegible]ட்டிக்கொள்வாய். ஏனென[illegible]ன் அண்ணன் திருமணம் செய்துகொள்வதாகவே யில்லை.

திடுக்கிட்டுவிடாதே! இத்தனை நாளும் மிக நெருங்கியவருக்கும் தெரிவிக்காததற்கு வருத்தப் படாதே! அண்ணன் ஏதோ சாது சன்னியாச்சிக் கூட்டமோ, பெண்கள் பாவ மூட்டைகள், சம்சார சாகரம் சஞ்சலம் நிறைந்தது என்று கருதும் தாய்க்குல விரோதியோ என்று எண்ணி ஏமாந்து விடாதே! இப்படியில்லா விட்டால் எந்த பெண்ணிடமோ உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன் அவள் கிடைக்காததாலோ, இனிமேல், கிடைக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டதாலோ, விரக்தி மனப்பான்மை பெற்றுவிட்டேன் என்றோ, உன் கற்பனையை ஓட்டாதே! நல்ல வேளையாக அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை நான் சந்திக்க வில்லை. ஆனால் நான் திருமணம் செய்து கொள்வதில்லை என்பதை நெடுநாட்களுக்கு முன்பே உறுதி யாக்கிக் கொண்டேன். ஆபத்துக்களிலே தாவி விளையாட வேண்டும். மரணத்தை திரணமாக மதிக்க வேண்டும். வீட்டைப்போல் நாட்டையும் நேசிக்க வேண்டும். கொங்கு நாடு கூனி விட்டதோ, கோழைகளின் கூடாரமோ, ஆமைக் கூட்டம் ஆகிவிட்டதோ என்று எவரும் கேட்காத வகையில் அங்கோர் ஆண்மகன் தோன்றி விட்டான், அவன் அசகாயசூரன் அவனுக்கு வீடு, வாசல், மனைவி, மக்கள்எல்லாம் நாடுதான் நாட்டு மக்களின் இதயங்களிலே அவன் கொலு வீற்றிருக்கிறான். அவன் இருக்கும் வரையில் கொங்கு நாட்டில் அந்நியன் ஆதிக்கம் வேரூன்ற அனுமதியான். அதனை கருவறுக்கும் பணியில் உயிரையே பயணம் வைத்திருக்கிறான் என்று எதிரிகளும் பகைவரும் அஞ்சவேண்டும், இப்படிப் பட்ட ஆற்றல் மறவன் இருக்கும்போது, நமது உரிமை வாழ்வுக்கு எந்த ஊறும் நேர்ந்து விடாது என்று நம்மவர் பெருமைப்பட வேண்டும் என்ற லட்சியத்தை வெறியாக்கிக் கொண்டேன். நீ தான் சொல்லு தம்பி! வடக்கு எல்லையிலே கும்பினியாருக்கும் மைசூரானுக்கும் நடை பெறும் போராட்டம் வேறு திசையிலே திரும்பி விடுமா? கொங்கு நாட்டு வீட்டு வாசற் கதவுகளை தட்டுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? இப்போதிருக்கும் மந்த நிலையே எவ்வளவு நேரம் நீடிக்கும் போர்க்களத்திலே இருக்க வேண்டிய வீரன்—கனல் தெறிக்கும் கண்களுடன் ஒழுகும் இரத்தத்தைப் பற்றி கவலைப் படாமல் வாளை சுழற்ற வேண்டிய என் கரங்கள் கண்கள் சொரியும் புனலைத் துடைப்பதற்கு பயன் பட்டால் நரம் சார்காத் தலை முறையாய் காத்த மானம் என்னவது? இல்லறத்திற்கு நான் விரோதியல்ல அதன் இனிமையை உணராதவனல்ல. எனினும்என்னைப் போன்ற சில 'விதிவிலக்கு' கள், எல்லா சமுதாயத்திற்கும் வேண்டும் என்ற முடிவில் இருக்கின்றேன். இந்த என் எண்ணத்தை மாற்ற முயற்சிக்காதே! தோல்வியே அவைாய். நாட்டுக்கும் நல்லதல்ல.

நான் மட்டும் என்னவாம்! அண்ணன் போர்க்களத்தில் ஈட்டி முனைக்கு எதிரே நிற்கும் போது, நான் போகக்களத்திலே புரளுவதா? அண்ணன் பயிற்சியும், ஆனூர்க்கோட்டைப் பண்பாடும் எனக்கு தியாக சுபாவத்தை அளிக்கவில்லையா? என்று கேட்டுவிடாதே! நம் குடும்பத்திற்கு நான் ஒருவன் போதும் தம்பி! முத்துவேலப்பரை நீ சந்திப்பதில் புதிய குழப்பம் விளையும் நான் சமாளித்துக் கொள்கிறேன். நமது குடும்பத்தில் சம்பந்தம் என்றுதானே சொன்னார். இலேதார் எங்கே போய்விட்டான்? அவசரப்பட்டு அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. உபகாரம் செய்ய வந்தவர்களுக்கு உபத்திரவம்கொடுக்கக்

கூடாது. உன் வேலையை நீ பார்க்கலாம். கவலைப்படாதே, தம்பி" என்று காலையில் எழுந்ததும் கூறிவிடுவது என்று முடிவு செய்தான். நிம்மதியோடு உறங்கினன்.

காலையில் கண் விழித்ததும் நேராக பெரிய தம்பியின் அறைக்குப் போனுன். இந்த மாதிரி தருணங்களில் தாமதம் என்ன பேராபத்தைக் கொடுக்கும் என்பதை சின்னமலை உணர்ந்திருந்தான். ஆனல் அவனது ஜாக்கிரதை பயன்படவில்லை. பெரியதம்பி அங்கில்லை. விடியற்காலையே குளித்துவிட்டு சென்னிமலைப் பக்கம்போய் வருவதாகச் சொல்லிச்சென்ற சேதி கிடைத்தது. சின்னமலைக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அங்குமிங்கும் உலவினன். தம்பியை பின் தொடர்ந்தால் அவன் முத்துவேலப்பரை சந்திபபதற்குமுன் அவனை சந்திக்க வேண்டும், அது சாத்தியமானதல்ல. அவன் சந்தித்துக் கொண்டிருக்கும்போது அங்கே செல்வதும் உசிதமல்ல என்று மனதிலே முடிவு செய்தான். நடப்பது நடக்கட்டும், ஒன்றும் கெட்டுவிடாது என்று நினைத்துக்கொண்டே வீட்டுத் தோட்டத்துக் கிணத்துப்பக்கம் அவன் கால்கள் நகர்ந்தன.

அண்ணன் குழந்தைசாமியும் அண்ணி கெம்பாயம்மாளும் பேசிக்கொண்டிருக்கும் குரல் கேட்டது.

"இனிமேல் ஒரு நொடிகூட இந்த வீட்டில் குடித்தனம்நடத்த முடியாது" என்ருள் கெம்பாயம்மாள்.

"அப்படி என்ன நடந்துவிட்டது, கெம்பாயி! காலையிலே எழுந்தவுடனேயே துவங்கி விட்டாய்" குழந்தைசாமியின் வார்த்தைகளிலே பணிவு இருந்தது.

"என்னை குறை சொல்வது என்ருலே உங்களுக்கு மிக்க சந்தோஷம். எது நடந்தாலென்ன, குடும்பத்தைப் பற்றியே உங்களுக்கு அக்கரை இடையாது"

"ஏன் இப்படி சீறுகிருய் விடிந்ததும் விடியாததுமாய்..."

"என் நிலைமை விடியாது போலத்தான் இருக்கிறது. நீங்கள் உண்டு, உங்கள் தம்பிகள் உண்டு. நான் சொல்லுவது உங்களுக்கு எங்கே ஏறுகிறது? என்ன இருந்தாலும் நான் பிறத்தியாள் தானே?

"ஏன், இப்படியெல்லாம் பேசுகிருய்! விஷயத்திற்கு வா"

"புதிதாக எதைச் சொல்லப் போகிறேனும். இனிமேல் என்னல் இதையெல்லாம் பார்க்க முடியாது. வேறு ஆள் யாராவது வைத்துப்பாருங்கள். நான் ஆரியப்பட்டிக்குப் போகிறேன். பெத்த பெண்ணுக்கு சோறு கூடவா போடமாட்டார்கள்"

"ஏன் விருந்தே கூடப்போடுவார்கள்"

"கேலிக்கு குறைச்சலில்லை. தம்பிமார்களை தட்டிக்கேட்க தைரியம் இல்லா விட்டாலும் இதிலெல்லாம் ஒன்றும் குறைவில்லை"

"என்ன கேட்கவில்லை என்கிருய்?"

"அதுகூட நான் சொல்லித்தர வேண்டுமாக்கும். இது வேறு கெட்ட பெயர்! ஊரிலே உள்ள குடும்பங்கள் போலவா நம் குடும்பம் நடக்கிறது. அவர்களுக்கு என்ன அக்கரை இருக்கிறது. வருகிருர்கள். போகிருர்கள். சமாராதனைபோல் தினமும் ஆக்கித் தொலைக்க வேண்டும். குபு குபு, என்று நாற்பது பேர் ஐம்பதுபேர்களை அழைத்து வருகிருர்கள். இது அன்ன சத்திரமா என்ன, நேரம், காலம் உண்டா? உங்களுக்கு தம்பிமார்கள் என்ருல் உயிர். ஒரு சிறு சொல் கூறக் கூடாது. தோட்டம், துரவு, காடு, கரை இவைகளைப் பற்றி கொஞ்சமாவது அக்கரையுண்டா? இப்படியிருந்தால் எந்த குடும்பம்தான் உருப்படும்? அவர்களுக்குப் பரவாயில்லை தனிக்கட்டைகள். நமக்கு குழந்தை குட்டிகள் இருக்கின்றனவே. இப்படியே இருந்தால் நாளைக்கு நடுச்சந்தியில் நிற்கவேண்டியதுதான்!"

"இப்படியெல்லாம் ஏன் அலட்டிக் கொள்கிருய். நான் வேறு, அவர்கள் வேறு. நாம்தானே அவர்களுக்கு தந்தையும்தாயும். உன்னை'நங்கை'யாளாகவாகருதுகின்ருர்கள். அவர்களுக்கு நீ தான் தாய்போல. மேலப்பாளையம் பெரிய வீட்டான் போலல்லவா இருக்கவேண்டும். அண்ணன், தம்பிகள் என்ருல் அப்படியல்லவா ஒற்றுமைவேண்டும் என்று ஊரார் பேசிக் கொள்வது உனக்குத் தெ[illegible], என்ன? தம்பிகள் தான் [illegible]ா? பெற்ற தாயையைவிட உன்னை பெரிதாக மதிக்கிருர்கள். இவ்வளவு நாள் இருந்த நற்பெயருக்குமாசு சேர்த்துவிடாதே, கெம்பாயி! உரத்தக் குரலிலே நான் பேசுவதே கிடையாது. இந்த உன் சுபாவம் நம் குடும்பத்துக்கே நல்லதல்ல!"

"நீங்கள்தான் பெருமை பட்டுக் கொள்கிறீர்கள் தம்பி தம்பி என்று. வீட்டுக்கு பெரியவர் நீங்கள்தானே! உங்களை எங்கே மதித்தார்கள்? தீர்த்தகிரிக்கு சென்னிமலை முத்துவேலப்பக் கவுண்டர் வீட்டில் பெண்பேசியிருக்கிருர்கள். ஒரு வார்த்தை உங்களிடம் சொல்லியிருப்பார்களோ, இப்போதுகூட பெரிய தம்பி சென்னிமலை போயிருக்கிறது. இந்த கொம்பாயம்மாள் அடுப்பங்கரையில் இருப்பவள் தானே என்று எண்ணிக்கொண்டிருக்கிருர்கள். எனக்கு எல்லா விஷயங்களும் சொல்ல ஆள் இருக்கிருர்கள். நீங்கள்தான் கண்ணை மூடிக் கொள்கிறீர்கள். அக்கம்பக்கத்தைப் பற்றியே கவலை இல்லை. நாளைக்கு இந்த வீட்டிற்கு புதிய மருமகள் வரப் போகிருள்? பெரிது, சிறிசு என்ற மரியாதை உண்டா? தாயைப்போல பாவிக்கிருர்களாம்! எல்லாம் என்னை ஏமாற்ற. நீங்கள் கூறும் வார்த்தைகள். தம்பிகளுக்கு வாஞ்சையிருந்தால் என் காதில் ஒரு வார்த்தை போட்டிருக்க மாட்டார்களா? ஊர் சொல்லி நான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது"

"நிஜமாகவா? எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? தம்பிமார்களுக்கு நல்லஇடத்தில் திருமணமாகி குடியும் குடித்தனமும் ஆகி விட்டால்......"

"நான் ஒருத்தி உளறிக் கொண்டேயிருக்கிறேன். உங்களுக்கு குதூகலம் பொத்துக் கொள்கிறது.

கொட்டு முழக்குக்கூட வைப்பீர்கள்போல் இருக்கிறது"

"ஏன், கெம்பாயி, எரிச்சலப் படுகிருய்? உனக்கும் நல்லதுதானே! பெண்பார்க்கும் வேலையும் குறைந்திருக்கிறதே! தம்பிக்கே பிடித்தமானது என்ருல் வேறு பொறுத்தமே தேவையில்லை"

"ஏன் சொல்ல மாட்டீர்கள். ஆரியப்பட்டி நடு அண்ணன் மகள் நல்லாத்தாளுக்கு என்ன பொருத்தக் குறைவாம்! மூக்கும் முழியுமாய் எலுமிச்சம் பழம் போல், அப்படிப்பட்ட பெண் உங்கள் குடும்பத்துக்குக் கிடைக்க வேண்டுமே! என்ன, இருந்தாலும் புது சம்பந்தம்"

"உன் கோபத்திற்கு காரணம் புரிகிறது. பெண்கள், என்ன இருந்தாலும் பிறந்த இடத்துப் பெருமையை விட்டு விடுவதில்லை"

"அப்படியெல்லாம் மாப்பிள்ளை கிடைக்காது என்று நினைத்து விடாதீர்கள். அவளைக் கொடுக்க மாட்டார்களா என்று எத்தனையோ குடும்பங்கள் தவம் கிடக்கின்றன"

"பிறகு ஏன் வளைத்து வளைத்து பேசுகிருய்"

"எங்களைக் கண்டால் உங்களுக்கு அவ்வளவு அலட்சியம். அவர்கள் படுத்துகிறபாடு போதாமல் நீங்கள்வேறுஎன்னை அவமானப் படுத்துகிறீர்கள்— என்னல் இனி ஒரு கணமும் இங்கே இருக்க முடியாது. விடியற் காலையிலேயே மூட்டை முடிச்சுகளெல்லாம் கட்டி வைத்து விட்டேன். வெளியே வண்டி தயாராகயிருக்கிறது. ஆள்காரன் காளை பிடித்து வர பட்டிக்கு போயிருக்கிருன். நான் ஆரியப்பட்டி போவதை நிறுத்த முடியாது" என்று ஆவேசமாகக் கூறினள்.

குழந்தைசாமி ஒன்றுமே பேசவில்லை. திக்பிரமை பிடித்தவர் போல் நின்ருர். இவ்வளவு நேரமும் செடியருகே நின்ற சின்னமலையை பேச்சுவேகத்தில் அவர்கள் கவனிக்க வில்லை. சின்னமலை அப்படியே திரும்பி ஆற்றங்கரைக்கு நடந்தான்.

அண்ணன், அண்ணி மனோபாவம் மீண்டும் சின்னமலையின் உள்ளத்தில் பெருவருத்தத்தைக் கொடுத்தது. கெம்பாயம்மாள் கோபக்காரி. குழந்தைசாமியின் அடக்கத்துக்கும் கெம்பாயம்பாளின் ஆத்திரகுணத்திற்கும் மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்யாசம் இருந்தது. சின்னமலையின் கண்களிதே நீர் சுரந்தது. வீடுதிரும்பிக் கொண்டிருந்தான்.

சலங்கை மாடு பூட்டிய வில் வண்டி பாதையிலே போய் கொண்டிருந்தது. வண்டியில் கெம்பாயம்மாள் மூட்டை முடிச்சுக்களுடனும் குழந்தை குட்டிகளுடனும் அமர்ந்திருந்தாள். வண்டி மறையும் வரை, சின்னமலை அந்த திக்கையே நோக்கி, பார்த்துக் கொண்டே நின்ருன்.

[தொடரும்]

மதுரை மாவட்ட தி. மா. மு. கழக முதல் மாநாடு

★

மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில் 29-11-1959 ஞாயிறு காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரையிலும் நடைபெறும்:

தலைவர் :

கே. ஏ. கிருஷ்ணசாமி, B. A. (Hons)
[சட்டக்கல்லூரி மாணவர்]

திறப்பாளர் :

பி. எஸ். மணியம், B. A. B. L

பேச்சாளர்கள் :

எஸ. டி. சோமசுந்தரம், (B.E.), பொதுச்செயலாளர், தி. மா. மு. கழகம்
டி. கே. பொன்னுவேலு, B. A.
எஸ். ஆறுமுகம், B.A.
கோவை. செழியன், B.A.
உ. பில்லப்பன், M. A.
பி. ராசமாணிக்கம், B. A.
பூவை, இராமாநுஜம், B. Com. (Hons)
சி. என். ஏ. பரிமளம்,
எஸ். ஆர். பாலசுப்ரமணியம், B. A.(Hons)
வே. சௌந்தரராசன், B.A.B.L.
மோகன்தாஸ், (M.B.B.S.)
தி. அழகிரிசாமி
ப, நெடுமாறன்,
பி. பாலசுப்ரமணியம், B.E
இ. கிருஷ்ணன், (B. Sc.)
டி. கே. கோபால கிருஷ்ணன், B A.
என். வீ, என். சோமு
சீர்காழி. சோமு, B. A.
மலைச்சாமி
இராசகுமார் பீட்டர், B.A
ஜே. என். இராஜு
அ. இளங்கோவன்
எம். கருப்பசாமி
கே. எஸ். சம்பத்து, B.E.
தங்க பாண்டியன், B. A.
மைனர் மோசஸ், B. A.
மதுரை மா. பாண்டியன்
வெற்றிச் செழியன்
இளமாறன், B. A.
வெற்றிச்செல்வன்
இளம்வழுதி. B. A.
அ. பாலு, B. A.
தோழியர் சற்குணம்

மாணவ மணிகளே!
அணி அணியாய் திரண்டு வாரீர்! வாரீர்!

★

கு. இந்திரசித்து, வ. கு. தலைவர்.

புகழ்மணி பொருளாளர்.

வெற்றிவேந்தன்,
தமிழ்ச்செல்வன்,
சாமி,
இராசேந்திரன்
செயலாளர்கள்.

மஞ்சள் குளிச்சுவரும் – மருதாயி!

— புதுமதியன்

பச்சைப் பசேலென ஊரைச் சுற்றிலும் வயல்கள்! காற்றில் அசைந்து கதிர் நீட்டப் போகும் சூற்பயிர்கள்! அதிகாலையிலிருந்தே வயலுக்கு ஏற்றம் பிடித்து இறைக்கிறான் அவன். தண்ணீர் சூற்பயிர்கட்குப் பாய்வதுபோல் அவன் நெஞ்சிலும் இன்ப எண்ணங்கள் சலசலப்போடு பாய்ந்து வழிந்தது! அவன் விழிகள் அடிக்கடி வயற்பரப்பின் தொலைவில் வட்டமிட்டன.

அன்றாடும் அவள் அந்த வழியில்தான் சோறு கொண்டு போவது வழக்கம். வயலில் வேலை செய்யும் அவளுடைய தத்தானுக்குத்தான் கலயத்தில் சோறு கொண்டு வருவாள் அந்தக் கன்னி! இன்றைக்கும் வழக்கம் போலவே ஆடி அசைந்து வருகிறாள். இதைக் கண்ட அவனோ இன்று எப்படியும் வழிமறித்துக் கேட்டே விடுவது என்ற எண்ணத்தை உறுதிப்படுத்திக் கொண்டான்.

கட்டம் போட்ட கண்டாங்கிச் சேலைகட்டிக் கொண்டு, ரவுக்கைத் துணிப் போட்டுக் கொண்டும் வருகிறாள். கையில் கண்ணாடி வளையல் கலகலக்கக் கைவீசி, கால் மெட்டி 'கிணிங் கிணிங்' கென்று தாளமிட வரப்பில் நடந்து வருகிறாள்! அவள் தான் மருதாயி அவனுக்கு உரிமைக்காரி. அத்தை மகள். துணிச்சலோடு அழைக்கிறான்.

"கட்டமிட்ட சீலெகட்டிக் கை
ரவுக்கை போட்டுக்கிட்டு,
மெட்டி கிணுங்கடிக்க மேவரப்பிலெ
பேரற பொண்ணே!"

அவளோ இதைக் கேட்டும் கேளாதவள்போலப் போகிறாள். மாமன் மகன் என்ற முறையை வைத்து விளையாடுகிறான் என்று எண்ணிக் கொண்டாள்! வெட்கத்தோடு கடைக் கண்ணால் பார்த்துவிட்டு மேலும் நடக்க ஆரம்பித்தாள். அவனோ விடுவதாக இல்லை. தன்னுடைய மனத்தாகத்தை எல்லாம் கொட்டுகிறான்!

"பொட்டு வச்ச உம் மொகத்தெப்
போவயிலே கண்டுகண்டு,
கட்டி வச்சுப் பாத்தாலும் தங்கமே!
கட்டிலிலெ எம்மனசு"

என்று அவளுடைய பொட்டு முகம் தன்னை மயக்குவதையும், தன்மனம் கட்டிலே நில்லாமல் அந்தக் கன்னியின் பின்னால் போவதையும் கூறுகிறான்.

அவளோ மச்சான் பாட்டுக்கு மறு பாட்டுச் சொல்ல நாணி, வாய் கூசியவாறு நடக்கிறாள்! அவள் நெஞ்சில் மச்சானுக்கு மகத்தான இடம் ஒதுக்கி வைத்திருந்தாலும், வெட்கம் என்ற வேலி குறுக்கே நின்றது. ஆசையோடு பார்த்துக் குறுநகை புரிந்தபடி மேலும் இரண்டடி நடக்கிறாள். அவனோ இன்றைக்கு அவள் வாயைப் பிடுங்கி விடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். பேசாது நகரும் அவளைப் பார்த்து மறுபடியும் ஒருபாடல் பாணத்தைத் தொடுத்தனுப்புகிறான்.

'கெண்டெச் சாறு காச்சிக்கிட்டு கீ
வரப்பிலெ போற தங்கம்–உன்
கெண்டெக் கால் அழகெக் கண்டு
கெஞ்சறண்டி நெஞ்சுலந்து'

இது அவள் செவியிலெ பாய்ந்து நெஞ்சை ஊடுருவியது! மச்சான் கெஞ்சுவதாகக் கூறியதும் மங்கையின் மனம் வெண்ணெய் போல உருகிற்று! தன்னிடம் கெஞ்சும் மச்சானுக்குத் தக்க பதில் சொல்கிறாள். நினைத்து நினைத்து ஏங்கும் மச்சானைக் காலம் வரும்போது கட்டிக் கொள்ளலாம் என்பதைக் குறிப்பாகக் கூறி விடுகிறாள்!

"தெக்குமின்னு வாரியிலெ தெனம்
பாத்தெறைக்கு மச்சான்,
பக்குவமாய் பாத்திருங்க பழங்
கனுஞ்சா உழுகுமச்சான்"

தெற்குத்திசை நோக்கிய கிணற்று வாரியில் தினந்தினமும் தன்னுடைய வருகையைப் பார்த்துக் கொண்டு தண்ணீர் இறைக்கும் மச்சானுக்குத் தன்னுள்ளத்தைக் காட்டுகிறாள். வாரி மேட்டில் வம்புக்கிழுக்க வேண்டாம்! பழம் கனிந்தால் காம்பிற்றுத் தானே விழுவதைப் போலக் கல்யாணம் செய்யும் காலம் வரும்போது தானாக நடந்துவிடும் என்கிறாள். உரிமைக்காரன் அவனிருக்கும்போது அவனுக்குக் கிட்டாமல் வேறுயார் வந்துவிடப் போகிறார் என்பதைக் கூறி நடையைக் கட்டுகிறாள்!

அவன் விடுவதாக இல்லை. ஊரிலுள்ள காளைகள் எல்லாம் அவள்மேல் கண்வைத்து வட்டமிடுவது அவனுக்குத் தெரியும்! அதனால்தான் தன்மீது அத்தை மகள் மருதாயி ஆசை வைத்திருக்கிறாளா? அல்லது வேறு எவனையாவது கட்டிக்கொள்ளத் தீர்மானித்துக்கொண்டு நம்மை ஏமாற்றுகிறாளா? என்று திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள அவனுக்கு ஆசை! அதனால் அவளுடைய எண்ணத்தை வஞ்சகமில்லாமல் கூறும்படி கேட்கிறான்!

"மஞ்சக் குளுச்சுவரும் மருதாயி
அத்தெ மவ,
வஞ்சனெயில்லாமெ யிப்போ வா(ய்)
தெறந்து சொல்லு தங்கம்!"

மச்சானுக்குத் தன்மீதுள்ள அளவு கடந்த வாஞ்சையை எண்ணிக் களித்தாள் மருதாயி! அவன் மனங்குளிரப் பதில் சொல்லிவிட நினைக்கிறாள். தான் மச்சானைக் கட்டிக்கொள்ள விரும்புவது உண்மைதான்! ஆனால் தன் வீட்டுக் கிழவன் தாத்தன் தடையாகஇருப்பானே அப்படி இருந்தால் நான் என்ன செய்வது? அதைத் தீர்த்துக் கொள்வதெல்லாம் அவன் பொறுப்பு என்பதைக் கூறுகிறாள். தாத்தன் தடை செய்வான் என்பதற்குக் காரணம் அந்த இரு குடும்பங்களுக்கிடையே இருந்த குடும்பப்பகைதான்! தாய் தந்தையற்ற அவளைத் திருமணம் செய்து கொடுப்பது அவள் [illegible]த்தாவின் பொறுப்பு!

"நெஞ்சு நெஞ்சு ஒண்ணு மச்சான்
நெனவு வேறில்லெ மச்சான்,
நீங்கோ கெஞ்சறதைத் தீத்து
வெய்க்கக் கெழவெமனம் வேணு
மச்சான்"

எப்படியாவது தாத்தன் மனம் வைத்தால்தான் நம்முடைய திருமணம் என்பதைக் காட்டிவிடுகிறாள். நம்முடைய மனம் இரண்டும் ஒன்றுதான், இருந்தாலும் தாத்தாவின் சம்மதம் இருந்தால்தான் திருமணம் முடியும் என்று கூறுகிறாள்!

இதைக்கேட்ட அவன் மனம் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது! அவள் தாத்தாவைப் பற்றிக் கவலையே இல்லை! முந்தாநாள் சந்தைக்குப் போகும்போது அவரே இந்தப் பேச்சை எடுத்தார்! அவனோ பேசாமல் இருந்து தன்னுடைய சம்மதத்தைக் காட்டிவிட்டு வந்திருக்கிறான். ஆதலால் இனித் தாத்தாவைப் பற்றிய கவலையில்லை என்பதைக் கூறுகிறான்!

"சந்தெ வழிபோவையிலெசாடையா
முந்தாநா
சொந்தமாக் கைபுடிக்குஞ் சேதி
சொன்னாரு பாட்டன்!"

உரிமைப்பெண்ணான உன்னை நான் கட்டிக்கொள்வதற்குத் தாத்தாவின் தடையில்லை என்பதைக்கூறிவிட்டான்! அவளும் தன்னையே மணந்துகொள்ளக் காத்திருக்கிறாள் என்பதை உணர்ந்ததும் அவன் மனம் கும்மாளமிட்டாடியது! ஆசை அலை புரண்டது! அவளையே எண்ணி எண்ணி வாடும் தன்மனக்குறையைத் தீர்க்க வேண்டுமென்று அவளிடம் கேட்கிறான்! தாகம் வந்தால் தண்ணீர் குடித்துத் தீர்த்துக்கொள்ளலாம்! உரியவள்மேல் மோகம்வந்தால்என்ன செய்வது? உரியவளையே தீர்த்து வைக்க வேண்டுமென்று வேண்டுகிறான்!

"தாகம் வந்தாத் தண்ணி உண்டு!
தங்கமே உன்னழகால்!
மோகம் வந்து சேந்ததடி தங்கமே!
வாரவழி வேளே சொல்லு!"

மோக நோய் கண்டுவிட்டதென்கிறான்! அதற்குக் காரணம் அவள் அழகுதானாம்! அதற்கு மருந்தும் நீதான்! ஆதலால் அதைத் தீர்க்கவரும் வழியையும், சமயத்தையும் கூறிவிட்டுப் போகும்படி அவளிடம் கெஞ்சுகிறான்!

ஆசை மச்சானின் கேள்விகள் அவள் உள்ளத்தைக் கிள்ளி விளையாடின! தன்னையே அடையப்போகும் மச்சானின் தவிப்பான கேள்விகளுக்கு ஆறுதலான விடை கூறுகிறாள்! அவனுடைய உரிமைக்காரி தன் மீது மனம் வைத்தவரின் மனக்குறையைப் போக்கத்தானே வேண்டும் என்று எண்ணிக் கூறுகிறாள்!

'உங்கபொருள் எம்மேலே ஒசத்தி
யிலெ ஆசெயின்னு
மங்குநெலாச் சரியோ மத்தவங்க
தூங்கெயிலெ'

அவனுடைய உரிமைப் பொருளான தன்மீது ஆசைகொண்டு வாடுவது உண்மையானால், பிறைநிலா மேற்கே விழுந்தபின் ஊராரெல்லாம் நன்றாக உறங்கும்போது நடுஇரவில் வருமாறு சொல்லுகிறாள்!

ஏமாளித்தனமாக நேரங்கழித்து இரவில் வந்தால் நம் திட்டம் கெட்டுவிடும். ஏனென்றால் நேரத்திலே இரவில் விழித்துக் கொள்ளும் தாத்தான், இரும்பு

(8–ம் பக்கம் பார்க்க)

பொள்ளாச்சீ எஸ். ஆர். எம். எஸ். மில்லில்
21-11-59 சனிக்கிழமை இரவு
சினிமா நடிகர்
வளையாபதி முத்துகிருஷ்ணன்
அவர்கள் தலைமையிலும்
22-11-59 ஞாயிற்றுக்கிழமை இரவு
அறிஞர் அண்ணா
அவர்கள் தலைமையிலும்
பொள்ளாச்சி முரசொலி நாடக மன்றத்தார்
பெருமையுடன் அளிக்கும்
"மேயர் மெய்யப்பர்"
நாடகம் நடைபெறும்
கதை, வசனம்: கே. துரைக்கண்ணன்
பாடல்கள்: கே. சி. எஸ். அருணாசலம்

"கல்லறை மைதானத்தில்...!"

ப.வாணன்

"...... இந்த நாட்டின் நல்வாழ்விற்காக உயிர்நீத்த மாவீரர்களின் கல்லறையிலே இன்று நாம் கூடியிருக்கிறோம்! தியாகத்தின் உச்சத்தில் வீரமரணம் எய்திய அவர்களுக்கு முன் நாம் மிகச் சாதாரணமானவர்கள். இங்கே நாம் கூடிப் பேசுவதை நாளைக்கு உலகம் மறந்துவிடும். ஆனால் அந்தத் தியாக புருஷர்களை என்றும் மறக்காது! எந்தக் கொள்கைக்காக அவர்கள் தியாகத் தீயில் குதித்தனரோ, அதே கொள்கை செழித்து வளர, நாமும் நமது வாழ்வை அர்ப்பணிப்போம். அதுவே மாண்ட மாவீராகளுக்கு நாம் செலுத்தக்கூடிய உயர்ந்த மரியாதையாகும். அதுவே அவர்கள் வீணுக்குழைக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாகும். அவர்கள் விரும்பியதுபோல், மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும், மக்களுடைய ஆட்சிக்கு இவ்வுலகில் என்றுமே அழிவில்லை என்பதை நிலைநாட்டுவோமாக!"

1863-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் தேதியன்று மக்களை திருத்திய உத்தமர்களில் ஒருவரான ஆபிரகாம் லிங்கன் கூறிய பொன்மொழிகள் இவை. பேசப்பட்ட இடம், அமெரிக்காவில், ஜெட்டிஸ்பர்க் நகரத்தில் இருக்கும் கல்லறை மைதானமாகும்!

மனிதசமுதாயத்தையே திருத்திய அந்த மாவீரன், தன்னடக்கத்தோடு "இன்று பேசுவதை நாளை மக்கள் மறப்பர்" என்றான். ஆனால் அதற்குநேர்மாறாக லிங்கனின் ஜெட்டிஸ்பர்க் சொற்பொழிவை மக்கள் என்றுமே மறப்பதில்லை!

மனிதனுக்கு மதிப்பிருக்கும் எந்த இடத்திலும், லிங்கனின் பொன்மொழிகள் எதிரொலித்த வண்ணமே இருக்கின்றன. ஜனநாயகத்திற்கு யார் யாரோ எந்தெந்த விதமானவிளக்கங்களோ கொடுத்துச் சென்றிருக்கின்றனர். ஆனால், அன்று ஜெட்டிஸ்பர்க்கிலே லிங்கன் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையின் மேல்தான் எல்லாம் அமையுமே ஒழியவெறெதிலும் இல்லை. மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்களாட்சியே ஜனநாயகம்!

கொள்கை விளககம் புரிந்து கொள்கைக்கு உயிரூட்டிய லிங்கனின் வாழ்க்கையே ஒரு கலங்கரை விளக்கமாகும். அந்த மாவீரனின் நூற்றி ஐம்பதாவது பிறந்த தினவிழா சென்ற பிப்ரவரித் திங்களிலேதான் நடைபெற்றது. 1809-ம் ஆண்டு கெண்டகியில் பிறந்த அவர் சிறு குழந்தையாக இருக்கும்போதே வயல் வெளிகளிலே வேலை செய்யவேண்டியிருந்தது. ஒன்பதாவது வயதில் தாயைஇழந்து மாற்றாந்தாயின் மேற்பார்வையிலே வளரவேண்டியவரானர். காடுகளை அழித்து நகரமாக்கிக் கொண்டிருந்த காலம் அது. அமெரிக்காவின் கிழக்கு பாகத்திலிருந்து மக்கள் மேற்குநோக்கி குடியேறிக் கொண்டிருந்தனர். போகும்போதே, அடர்ந்த காடுகளை நிர்மாணிப்பதும், தோட்டம் துரவுகளை அமைப்பதும், கழனியினை சீர்திருத்தி உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்வதும், ஆலைகளை நிறுவுவதும் சென்ற நூற்றுண்டில் அமெரிக்கரின் அன்றுட வேலையாகும். லிங்கன் குடும்பமும் கெண்டகியிலிருந்து இந்தியானுவுக்கும் பின் அங்கிருந்து இல்லினுஸ்க்கும் சென்றது. லிங்கனுக்கு படிக்க வசதி கிடையாது. கேள்வி ஞானம்தான். பதினேழு வயது வருவதற்குள் லிங்கன் ஆறு அடி உயரம் கொண்ட திடகாத்திரனுகிவிட்டான். தொழிலில் எவ்வளவு ஆர்வத்தோடு ஈடுபட்டானே அவ்வளவு ஆர்வத்தோடு படித்து அறிவை வளர்ப்பதிலும் ஆசை கொண்டான். பள்ளிக்கூடங்களில் சேர்ந்து முறையாக படிக்க வசதி இல்லாமல் போகவே, உற்றார் உறவினர், அண்டை வீட்டிலிருப்போர் ஊர்க்காரர்கள், பக்கத்து நகரத்தார்கள் இப்படி ஐம்பது மைல் சுற்றுவட்டாரத்தில் இருந்த தெரிந்தவர்கள் அத்தனை பேர்களிடம் இருந்த புத்தகங்களை கடன்வாங்கி சில ஆண்டுகளுக்குள் படித்து முடித்தானும்!

வீணுக்குழைக்கவில்லை! விழலுக்கு நீர் பாய்ச்சவில்லை!

வயது வந்தவுடன் சில நாட்கள் கடை குமாஸ்தாவாயிருந்து, பிறகு சொந்தமாக வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். வாணிபத்தில் பெரும் நஷ்டமடைந்து, கடன்பட்ட நிலையிலிருக்கும் போதுதான் அவனுக்கு அரசியல் வாழ்வு தொடங்கியது. அதற்கு பின்தான் அவன் பெரிய வழக்கறிஞனுகவும் மாறினுன்!

1834-ல், லிங்கன் தன் இருபத்திஐந்தாவது வயதைத் தாண்டிக் கொண்டிருக்கும் போது, இல்லினுஸ் மாகாணத்தின் பிரதிநித்துவ சபைக்கு உறுப்பினுக தேர்ந்தெடுக்கப்பட்டான். அதே இல்லினுஸ் மாகாணத்திலிருந்து வாஷிங்டனில் இருக்கும் அமெரிக்கசெனட்டிற்குபிரதிநிதியாகச் சென்றவர் டக்ளஸ் என்பவர்.

"16, 17 நூற்றுண்டுகளில் அடிமைகளாக ஆப்ரிக்காக் கண்டத்திலிருந்து அமெரிக்காவில் கொண்டு வரப்பட்ட நீக்ரோக்கள். வெள்ளையரின் சொந்த சொத்தே அந்த நீக்ரோக்களுக்கு சுதந்திரம் என்று பேசுவது நாட்டின் வளர்ச்சிக்குக் குந்தகமானது" என்றெல்லாம் திமிர்வாதம் பேசினுர். டக்ளஸ் செனட் சபையில்.

"மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வில்லை; பிரிட்டனிலிருந்து விடுதலை பெற்றநாம் நம்மில் சிலரை அடக்கி அடிமையாக வைத்திருப்பது நியாயமில்லை; இந்த நாட்டில் பாதி மக்களை அடிமைகளாக வைத்து மீதிபேர் அவர்களை ஆள்வது நீண்ட நாளைக்கு நிலைக்காது; இந்த ஆட்சி நீடிக்க வேண்டுமானுல், இந்த நாடுஒற்றுமையோடு பலப்பட்டு செழித்தோங்க வேண்டுமானுல், இந்த அடிமை முறை அடியோடு ஒழிய வேண்டும். "நான் எப்படி அடிமையாக இருக்க விரும்ப மாட்டேனே அப்படியேயாருக்கும் எஜமானனுகவும் இருக்க விரும்ப மாட்டேன்!" என்றெல்லாம் அழுத்தம் திருததமாக டக்ளஸை எதிர்த்தான் லிங்கன்.

டக்ளஸோ பணமும், புகழும் படைத்தவன்.

லிங்கனே கடன் பட்டுக் கொண்டிருந்தான். "இந்த உடையில் அவன் நீதி மன்றத்திற்கு வந்தால் நாங்கள் எதிர்த்து வழக்காட வரமாட்டோம்" என்று வழக்கறிஞர்கள் கூறுமளவு, மட்டமான உடையில் தான் லிங்கனை உலவ வைத்தது அவனுடைய பொருளாதாரநிலை.

இருந்தும் லிங்கன் சளைக்கவில்லை. "எல்லா மனிதனும் பிறக்கும்போது ஒரே நிலையில் தான் பிறக்கிருன். பிறகுதான் அடிமைத் தளைகள் பூட்டப்படுகின்றன!" என்ற பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட பொன்மொழிகளை பேசுவோர் அடிமை முறையை போற்றி வளர்ப்பது அவமானம் என்று நாடு பூராவும் சுற்றி பிரச்சாரம் செய்தான். துண்டு.பிரசுரங்களை வெளியிட்டான். இரவு, பகலாக மனித உரிமைக்காக போராட ஆரம்பித்தான். கடைசியில் உண்மைக்கு வெற்றி கிடைத்தது. காதலிலும் டக்ளஸை தோற்கடித்து மேரிடாட் என்ற பெண்ணை தன் மனையாக்கிக் கொண்டான். அதேபோல் 1861-ம் ஆண்டு மார்ச் நாலாம் நாள் டக்ளஸைத் தோற்கடித்து, அமெரிக்க நாட்டின் முதல்வராக தேர்ந்தெடுக்கப் பட்டு வாஷிங்டனுக்கு போனான்!

லிங்கனின் வாஷிங்டன் வரவு, நாட்டையே இருதுண்டாக்கிற்று. வட அமெரிக்க மாகாணங்கள் நீக்ரோவுக்கு சுதந்திரம் கொடுக்கவும், தென் அமெரிக்க மாகாணங்கள் அது செய்யாதது மாத்திரமல்ல; அப்படி செய்வதை விட அமெரிக்க கூட்டிலிருந்தே பிரிந்து தனியாகிறோம் என்று போர்ப்படைத் திரட்டின. நாடே யுத்தக்களரியாக ஆகிற்று. லிங்கனின் முதல்வர் பதவி முட்களால் ஆன ஆசனமாகியது. இரவு பகலாக போர் என்று நான்காண்டுகள் அலையவேண்டிய நிலை உண்டானது. அடிமை முறை ஒழிய போர் துவக்கி, நாட்டை ஒன்றுகக் கட்டிகாக்கவே பெரிய போர் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாட்டில் எங்கு பார்த்தாலும் வாக்கு வாதங்கள். தந்தை ஒரு பக்கமும், மகன் வேறு பக்கமும் நின்று போரிட்டனர். "கறுப்பர்களுக்கு சம உரிமையா" என்று சீறிப் போரிட்டனர் பழைமைப் பிடிப்போடு இருந்த வெள்ளையர். வயல்களுக்கெல்லாம் தீயிட்டு உணவுப் பஞ்சம் ஏற்படுத்தினர். லிங்கன் போகிற இடமெல்லாம் பிணங்கள் குவிந்துகிடந்தன. "விதவைகள் எண்ணிக்கையை அதிகமாக்குகிறேனே" என்று வருத்தப்பட்டானே தவிர, எடுத்துக் கொண்ட கொள்கையை விட்டுக்கொடுக்கவில்லை. அரசாங்கத் துருப்புகள் தோல்வியடைவது கண்டதும் பல தளபதிகள் தெற்கு நோக்கி ஓடினர். இருந்தும் லிங்கன் அஞ்சா நெஞ்சனுக வாஷிங்டனில் "வெள்ளை மாளிகை"யில் அமர்ந்துக் கொண்டு, மிக அமைதியாக புது புது ராணுவத் திட்டங்கள் போட்டு அனுப்பிக் கொண்டிருந்தான்.

இந்த நேரத்தில் ஆங்கில அரசாங்கம்கூட லிங்கனுக்கு வேலை செய்தது. தனக்கு பக்கத்திலிருப்பவர்கள் யார் யார் நேர்மையானவர்கள், யார் யார் துரோகிகள் என்று கூட தெரியாத நிலைமையாம்! இருந்தும் லிங்கனின் மனேதிடம், சேர்மை, கொள்கைப் பற்று, அவருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. நான்காண்டுகள் போராடி லட்சக் கணக்கில்மக்களை பலிகொடுத்து திமிர் கொண்டோரை அடக்கி, மக்களை திருத்தினுர் அந்த மகா உத்தமர். 1865-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் தேதி போர் நின்று, வெற்றி கிடைத்தது. ஒன்றுபட்ட அமெரிக்க நாட்டின் முதல்வராக லிங்கன் மறுபடியும் வெளி வந்தார்.

"இந்த அடிமை முறை தவறில்லை என்றுல் உலகத்தில் எது

(8-ம் பக்கம் பார்க்க)

உணவு ஊர்வலம்...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவு தூரம் அவர்கள் வரவேண்டியதில்லை,

சட்டமன்றத்தின் வாயிலை உணவுஊர்வலம்அடைகிறது. மெய்லார்ட்டும் பதினைந்து தாய்மார்களும். தூதுக் குழுவாக சந்திக்கின்றனர். "பாரீஸ் பட்டினியால் அணு அணுவாக செத்துக் கொண்டிருக்கிறது. நாள்பூராவும் ரொட்டிக் கடையிலே காத்துக்கிடக்கிறது உழைப்பாளிக் கூட்டம். இந்த வேலைக்கே நேரம் சரியாய் விடுவதால் மறு நாள் கூலியில் மண் விழுகிறது இதை கேட்பதற்குநாதியில்லையா ?" என்று குமுறுகிருன்.

மன்னன் மாளிகையை காண்பிக்கின்றனர். ஆறுதாய்மார்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். இதுநாள் வரை அரசிளங் குமரிகள் பிரஞ்சு சீமாட்டிகள் ஆகியோருடைய வண்ணச் சீரடிகளை மட்டுமே அறிந்துள்ள வர்செயில்ஸ் அரண்மனை பளிங்குத் தரையில் பாரீஸ் நகர பாமர பெண்களின் பாதங்கள் பதிந்தன.

மன்னனின் கருணை வார்த்தைகளுக்கு மசிவதாயில்லை" ஆறுமணி நேரம் சேற்றிலும் சகதியிலும் அடிபட்டு வந்திருந்து வெறும் வாக்குறுதிகளைப் பெற்றுப்போக அல்ல. மன்னனும் ராணியும் பாரீஸ் பட்டணம் கிளம்ப வேண்டும்" இப்படி குரல் வலுத்தது.

சட்டமன்றத்தில் பட்டினிப்பட்டாளம் நுழைந்தது. வெளியே போன மந்திரி திரும்பி வரும் போது அவர் ஆசனத்தை ஓர் அணங்கு ஆக்ரமித்திருந்தாள். பஞ்சம் தளகர்த்தனாக பட்டினிப் பட்டாளித்திற்கு கட்டளை பிறம்பித்துக் கொண்டிருந்தது. அந்த முற்றுகையின் முன் ஆட்சி பீடம் கிடு கிடு வென நடுங்கியது.

லூயி மன்னனும் மேரி அண்டாய்னெட்டும் மஞ்சத்தில் உறங்கினார்கள். ஆனால் பாவம் வர்செயில்ஸ் மாளிகை மஞ்சத்தில் உறங்குவது அதுதான் கடைசி இரவு என்பது அவர்களுக்கு தெரியவில்லை. மற்ற அதிகாரிகளும் உறங்கினார்கள். ஆனால் புரட்சி மட்டும் தூங்கவில்லை. விழிப்போடிருந்தது. விடியட்டும் என்று காத்திருந்தது. அதன் தடைபடாக் குருதியோட்டம் உதயசூரியன் வர மாட்டானா, ஒளி பரவாதா என்று துடியாய் துடித்தது ஓய்வு அதற்குதேவைப் படவில்லை.

மன்னன் மாளிகையில் காவலாளிகளுக்கும் தப்பி சிலர் நுழைந்தனர். அந்தகூட்டம் பெருகியது. ராணியின் அந்தப்புரம் எங்கே என்று தேடினர். பெருங் கூட்டம் திரண்டது "மன்னன் வரட்டும்" என்றனர். மாளிகை முற்றத்தில் லூயிதரிசனம் தந்தான். முகம் வெளுத்திருந்தது. "அந்த அலங்காரவல்லியும் வரட்டும்" என்ற ஆணை பிறந்தது. அண்டெய்ணட் திரு திரு வென விழித்தாள். மெய்காப்பாளன் வேறு வழியில்லை என்றான். கோபம் கொப்பளிக்க, பல்லை நற நறவென உதட்டில் கடித்துக் கொண்டு அண்டாய்னெட் வந்தாள். நேர் கொண்ட பார்வையும, அஞ்சாத நெறியும அவளிடத்திலே இருந்தது! அவள் கெஞ்சவில்லை, குனியவில்லை. அவளின் காந்தக் கவர்ச்சி கூட்டத்தை வசியப்படுத்தியது. இதழோரத்தில் நெளிந்த புன்னகையில் போதை மிதந்தது. கோழை மன்னனை விட இந்த கோப் பெருந்தேவி வீராங்கனை என்றனர்.

"வாழ்க மாதேவி! வாழ்க அண்டாய்னெட்" என்ற முழக்கம் விண்ணை முட்டியது வாழ்த்துக் கண்டு சிரித்தாள். அவள் கண்களில் நீர் வழிந்தது "இது ஓர் வானவில். இவர்கள் நம்மை வளைத்துவிட்டார்கள். பாரிஸ்பட்டணம் செல்வதை தவிர்க்க முடியாது" என்றாள். அவள் வார்த்தை மெய்யாக மணிக் கணக்காகவில்லை.

மன்னன் குடும்பத்துடன் பாரீஸ் பட்டணம் கிளம்ப நிர்பந்திக்கப்பட்டான்:

தங்கத் தகடுகளமைந்தவர் செயில்ஸ் அரண்மனைக் கதவுகள் ஒருமுறை திறந்தன. ஆறு புரவிகள் பூட்டப்பட்ட ரதத்தில் மன்னனின் குடும்பத்தினரும் பாரீஸ் பட்டணம் கிளம்பினர். மீண்டும் கதவு சாத்தியது. அன்றிலிருந்து திறக்கப்படவேயில்லை.

உணவு ஊர்வலம் திரும்பியது வெற்றிபவனியுடன் முந்தின நாளிருந்த மப்பும் மந்தாரமும் மறுநாள் இல்லை. கதிரவன் ஒளியுடன் பிரகாசித்தான்.

ஈட்டி முனைகளிலே ரொட்டியை குத்தியிருந்தார்கள் உணவுதானிய வண்டிகள் ஊர்வலத்தில் வந்தன. "இனி ரொட்டி கிடைக்கும் ரொட்டிக் கர்ரனையும் ரொட்டிக்காரன் மனைவியையும்கொண்டுவந்து விட்டோம்" என்று எக்காளமிட்டனர். ஓர்வகையில் அது மயமானஊர்வலம் — மன்னர் பரம்பரைமீளவே இல்லை,

ஓர்வகையில் வெற்றித்திருவிழாவாகும்தாய்க்குலம்போர் கொடி உயர்த்திவாகைசூடிய திருநாள். வழி முழுதும் மக்கள் இரு மருங்கும் வேடிக்கை பார்த்தனர். ஆனால் யாரும் மன்னரை வாழ்த்தவில்லை, அண்டாய்னெட்டின் மனத்திரையில் அதே பாதையில் எத்தனையோ நள்ளிரவுகளில் பாரீஸ் நடன அரங்குகளுக்கும் கேளிக்கைகளுக்கும் சென்ற நினைவு நிழலிட்டது.

வசந்த மண்டபங்களும் நிலா முற்றங்களும் இன்ப கேளிக்கைகளும் நிறைந்தவர் செயில்ஸ் மறைந்தது.

சிறைச்சாலையாய், சவக்குழியாய் அமையப்போகிற பாரீஸ் பட்டணத்திற்குள் மன்னன் குடும்பம் நுழைந்தது. உணவு ஊர்வல[illegible] ஊராள்பவனை சிறைப்படு[illegible]காட்சி பிரஞ்சுப் புரட்சிய[illegible] பொன்னேடு.

★

கல்லறை...!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுமே தவறில்லை!" என்று ஆணித்தரமாக கூறி, தான் கொண்டே கொள்கை நிறைவேறியதை கண்டு அடைந்த பெரு மகிழ்ச்சியோடு, சாமாதானம் நடந்த ஐந்துநாட்கள் கழித்து நடகம் பார்ப்பதற்கு வாஷிங்டனில் இருக்கும் போர்டு நாடகக் கொட்டகைக்குச் சென்றார் லிங்கன், தன் மனைவியோடு. இரவு 10-20 மணி நாடகம் பாதி நடந்து கொண்டிருந்தது. திடீரென்று 'டபீர்' என்று 'குண்டு' சப்தம் கேட்டது. அடுத்த விநாடி "முதல்வர் சுடப்பட்டு விட்டார்!" என்று லிங்கனின் மனைவி கதறும் சப்தம் கேட்டது. எல்லோரும் ஓடினார். ரத்தக்களரியில் இருந்த லிங்கனை எதிர்ப்புறத்தில்இருந்த வீட்டிற்கு எதித்துச் சென்றனர். இரவு பூராவும் இழுத்துக் கோண்டிருந்த உயிர், காலையில் உடலைவிட்டுபிரிந்தது. மனிதனுக்காக பாடுபட்ட அந்த உத்தமனை தென் மாகணத்தைச் சேர்ந்த சகோதர மனிதனே கொன்று வட்டான்.

மனித சமுதாயம் ஒரு மா பெரும் காவலனை இழந்தது. அன்று முதல் அபிரகாம் லிங்கன் காலத்தோடு காவத்தோடு காலமாகி விட்டான். அவனுடைய கல்லறை மீது நிற்கும் நாம் அவன் கூறியதுபோல் மக்களுக்காக, மக்களாய், மக்களுடைய ஆட்சி நிறுவ பாடுவோம். அதுவே அவன் வாழ்ந்ததும், சுடுபட்டு இறந்ததும் வீணாக் கில்லை என்பதை உணர்ந்ததிற்கு அடையானமாகும்!

★

(6-ம பக்கத் தொடர்ச்சி)

உரலில் பாக்கிடித்து வெற்றிலையைப் போட்டுமென்றுகொண்டு காவலிருப்பதுபோலக் கண் விழித்துக் கொண்டிருப்பான். ஆதலால் தாத்தன் எழுந்து பாக்கிடிப் பதற்கு முன்பே, முதற் கோழி கூவுவதற்கு முன்பே வந்தால் உங்கள் எண்ணம் நிறைவேறும் என்பதைக் கூறுகிறாள்.

'தாத்தம் பாக்கிடிக்கும் முன்னெ
தலெக் கோழி கூவு முன்னெ
பாத்து வந்து சேரு மச்சாம் பழுத்த
பழங்கொய் சுடலாம்!

தன்னுடைய ஆசைக்கு உரிமைக்காரியான அத்தை மகள் இவ்வளவு வித்தை தெரிந்தவளா? என்று எண்ணி வியந்தான் அவன்! அவனும்தான் வரும் அடையாளத்தை அவளுக்கு விளக்கிக்கூறி விழித்துக் கொண்டிருக்க வேண்டுகிறான்! வீட்டுக்குப் பின்னால் வந்து ஓலைக் கூரைமேல் கல்லெறிவதாகவும். அதைக் கேட்டு அவள் எழுந்து வந்துவிட வேண்டுமென்றும் கூறுகிறான்.

'ஊட்டுப் பொறவுக்குள்ள ஓலெ
மேல் கல்லெறிவேன்
கேட்டுவா, தங்கப் நெஞ்சிலெ
கெடந்த செமை தீத்திடலாம்!'

அவன் சிரித்துக்கொண்டே அவளைப்பார்த்தான்! தன்மனச் சுமையைத் தீர்க்கும் நேரத்தை எண்ணிப் பெருமூச்சுவிட்டுக் கொண்டான்! அவளோ குறு நகைபுரிந்தபடி கூத்தாடும் விழிகளால் அவனை ஒருமுறை விழுங்கிவிட்டு, வயல் வரப்பில் கைவளையும் கால் மெட்டியும் குலுங்க ஒயிலாக நடந்தாள்!!

தித்திக்கும் தேன் செய்தி!

★

★ புத்தம் புதிய அம்சங்களுடன்
★ எண்ணத்தை கிளறும் வண்ண ஓவியங்களுடன்
★ பனிரெண்டு பக்கங்களுடன்
★ விரைவில் 'தென்னகம்' வெளிவரும்.

அச்சிடுபவர்: கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும்: கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.